www.Padasalai.Net www.TrbTnpsc.com



# காலாண்டு பொதுத்தேர்வு - 2019

NP

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் : [ ]

## சமூக அறிவியல்

*நேரம்: 2.30 மணி* *மதிப்பெண்கள்: 100*

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 14 x 1 = 14

1. வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம்
   a) பழைய கற்காலம் b) இடைக்கற்காலம் c) புதிய கற்காலம் d) பெருங்கற்காலம்
2. சுமேரியர்களின் எழுத்துமுறை _______ ஆகும்.
   a) பிக்டோகிராபி b) ஹைரோகிளிபிக் c) சோனோகிராம் d) க்யூனிபார்ம்
3. 'காயல் சிறந்த நகரம்' என்று விவரித்த வெனீஸ் நகரப் பயணி யார்?
   a) வாஸ்கோடகாமா b) அல்பெருனி c) மார்க்கோபோலோ d) மெகஸ்தனிஸ்
4. மும்மணிகள் (திரி ரத்னா) என்ற மூன்று கொள்கைகளைப் போதித்தவர்
   a) புத்தர் b) மகாவீரர் c) லாவோட்சே d) கன்ஃபூசியஸ்
5. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க:
   கூற்று (A) : தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக்கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
   காரணம் (R) : நீர்ப்பாசன மேலாண்மை இடைக் கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது.
   a) கூற்றும் சரி, காரணமும் சரி; கூற்றை காரணம் சரியாக விளக்குகிறது.
   b) கூற்றும் சரி, காரணமும் சரி; ஆனால் கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை.
   c) கூற்று சரி; காரணம் தவறு d) கூற்றும் காரணமும் தவறானவை
6. பாறைக்குழம்பு _______ காணப்படுகிறது.
   a) புவி மேலோடு b) கவசம் c) கருவம் d) மேற்கண்ட எதுவுமில்லை
7. _______ ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்.
   a) துள்ளல் b) வண்டல் விசிறி c) டெல்டா d) மலையிடுக்கு
8. புவியின் மேற்பரப்பில் காணப்படும் வெப்பத்தின் சராசரி அளவு _______.
   a) 12°C b) 13°C c) 14°C d) 15°C
9. _______ புயலின் கண் என்று அழைக்கப்படுகிறது.
   a) அழுத்தம் b) காற்று c) சூறாவளி d) பனி
10. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க:-
    கூற்று : சுண்ணாம்புப் பாறை பகுதிகளில் நிலத்தடி நீர் குறைவாக இருக்கும்.
    காரணம் : நீர் சுண்ணாம்புப் பாறையில் உட்புகாது.
    a) வாக்கியம் சரி; காரணம் தவறு b) வாக்கியம் தவறு; காரணம் சரி
    c) வாக்கியம் மற்றும் காரணம் தவறு d) வாக்கியம் மற்றும் காரணம் சரி
11. உலகிலேயே மிகப்பெரிய மக்களாட்சி நாடு
    a) கனடா b) இந்தியா c) அமெரிக்க ஐக்கிய நாடுகள் d) சீனா
12. இந்தியத் தேர்தல் ஆணையம்
    a) சுதந்திரமான அமைப்பு b) சட்டப்பூர்வ அமைப்பு c) தனியார் அமைப்பு d) பொது நிறுவனம்
13. தேசிய வருமானத்தின் உண்மை மதிப்பீடாக இது கருதப்படுகிறது.
    a) மொத்த நிகர உற்பத்தி b) மொத்த உள்நாட்டு உற்பத்தி
    c) நிகர தேசிய உற்பத்தி d) நிகர உள்நாட்டு உற்பத்தி
14. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.
    a) வங்கியியல் b) ரயில்வே c) காப்பீடு d) சிறுதொழில்

### பகுதி - II

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 28 கட்டாய வினா)* 10 x 2 = 20

15. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறுக.
16. எகிப்தியர்கள் கலை, கட்டடக் கலையில் திறன் பெற்றவர்கள். - விளக்குக.
17. சங்ககாலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் முக்கியச் சான்றுகள். - விளக்குக.
18. ஹீனயானம் மற்றும் மகாயானம் பற்றி குறிப்பு வரைக.
19. கலிங்கா கல்வெட்டுக் குறிப்பு கூறுவது என்ன?
20. புவியின் உள் அடுக்குகள் யாவை?
21. தொங்கு பள்ளத்தாக்கு என்றால் என்ன?
22. சிறுகுறிப்பு வரைக: அ) மழை ஆ) பனி
23. காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
24. ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையைக் கூறுக.
25. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன?
26. பின்வருவனவற்றை விரிவாக்கம் செய்க : 1. NNP 2. PCI
27. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?
28. உயர் சிந்தனை வினா : மூப்பு நிலையில் ஆறுகள் இளநிலையை விட அகன்று காணப்படுகின்றன. ஏன்?

### பகுதி - III

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 42 கட்டாய வினா)* 10 x 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக:
    i) செள அரசின் தலைமை ஆவணக் காப்பாளர் _______.

S. Geetha B.T.Asst. Govt. Girls Hr. Sec. School. Manalmedu. Mayiladuthurai.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

ii) புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள மஹாபோதி கோயில் இன்றும் _______ உள்ளது.
iii) _______ உயிர் வாழ இன்றியமையாத வாயுவாகும்.
iv) நேரடி மக்களாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு _______.
v) பொதுத்துறை என்பது _______.

30. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i) கோடரிக் கருவிகள் | - | மிக உயரமான சமணச் சிலை |
| ii) பெரும் சட்ட வல்லுனர் | - | சங்ககாலத் துறைமுகம் |
| iii) சாணக்கியர் | - | ஹமுராபி |
| iv) அரிக்கமேடு | - | அச்சூலியன் |
| v) பாகுபலி | - | அர்த்தசாஸ்திரம் |

31. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i) கவசம் | - | சுண்ணாம்புப் பாறை |
| ii) கிளையாறு | - | ஜப்பான் |
| iii) கல்விழுது | - | ஆஸ்திரேலியா |
| iv) ஃபியூஜி எரிமலை | - | சிமா |
| v) வில்லி வில்லி | - | ஆற்றின் மூப்பு நிலை |

32. a) வேறுபடுத்துக:
i) இன்சல்பர்க் மற்றும் யார்டங்
ii) வானிலை மற்றும் காலநிலை

b) காரணம் கூறுக:
மூடுபனி போக்குவரத்துக்கு ஆபத்தாக உள்ளது.

33. சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.
34. கன்பூசியஸின் ஐந்து முக்கியமான கோட்பாடுகளை விளக்குக.
35. புவி அமைப்பை விவரி.
36. நிலையான காற்றுகளின் வகைகளை விவரி.
37. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
38. நேரடித் தேர்தலின் நிறை, குறைகள் யாவை?
39. ஏதேனும் ஐந்து சுற்றுச்சூழல் சட்டங்களையும், அவற்றின் செயல்பாடுகளையும் விவரி.
40. இந்தியாவின் வேலைவாய்ப்பு அமைப்பைப் பற்றி விவரி.
41. காலக்கோடு வரைக:
பொ.ஆ.100 முதல் பொ.ஆ.500 வரையிலான காலத்தில் நிகழ்ந்த 5 முக்கிய நிகழ்வுகள்
42. உலக வரைபடத்தில் குறிக்க:
i) சிந்து ii) எகிப்து iii) இந்தியா iv) சீனா v) ஹரப்பா

## பகுதி - IV

**IV. இரு வினாக்களுக்கு விடையளி:** 2 x 8 = 16

*தலைப்பு வினா:*

43. a) ஹோமினிட் மற்றும் ஹோமினின்ஸ்
i) ஹோமினிட் என்போர் யாவர்?
ii) ஆப்பிரிக்காவில் கருவிகளை உருவாக்கிய முதல் மனித இனம் எது?
iii) நவீன கால மனிதர்கள் எந்தப் பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?
iv) இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறுக.

b) எகிப்திய நாகரிகத்தின் பண்புகள்:
i) எகிப்து 'நைல் நதியின் நன்கொடை' என்று அழைக்கப்படுவது ஏன்?
ii) பாரோ மற்றும் விசியர்கள் என்போர் யார்?
iii) பிரமிடுகள் என்றால் என்ன? அதனை ஏன் கட்டினார்கள்?
iv) மம்மி உருவாக்க முறையைக் கூறுக. *(அல்லது)*

c) நடுகற்கள்:
i) மேய்ச்சல் நிலங்களுக்கிடையே காணப்பட்ட பொதுவான நடைமுறை என்ன?
ii) பகைவர்களின் கால்நடைச் செல்வத்தைக் கவர்ந்தவர்கள் யாவர்?
iii) இறந்த வீரர்களை மக்கள் எவ்வாறு நினைவுகூர்ந்தனர்?
iv) நடுகற்களை நிறுவுவதற்கான வழிமுறைகளை விளக்கும் தமிழ் நூல் எது?

d) கௌதம புத்தர்:
i) புத்தரின் இயற்பெயர் என்ன? ii) புத்தர் பிறந்த ஊர் எது?
iii) அவருக்கு ஞானோதயம் எங்கு ஏற்பட்டது? iv) புத்தர் முதல் போதனையை எங்கு நிகழ்த்தினார்?

44. **கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் குறிக்க.**
1. இமயமலைத் தொடர் 2. ஏதேனும் இரண்டு டெல்டாக்கள்
3. ஏதேனும் ஒரு வெப்ப மற்றும் குளிர் பாலைவனங்கள்
4. ஆல்ப்ஸ் மலைத்தொடர் 5. அமெரிக்காவின் நியூயார்கில் உள்ள சுண்ணாம்பு பிரதேச பகுதி
6. கிழக்கு ஆப்பிரிக்காவின் பிளவுப் பள்ளத்தாக்கு
7. பசிபிக் நெருப்பு வளையம் 8. ஏதேனும் ஒரு செயல்படும் எரிமலை

*******

S. Geetha B.T.Asst. Govt. Girls Hr. Sec. School. Manalmedu. Mayiladuthurai.